கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 14.04.2012

முதற்பக்கம்
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
திருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
சலசலப்பு
நோயல்நடேசன்
வளர்பிறை
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழ்முஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஹீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
சமத்துவம்
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (44)

### 44. புலிகளை ஓட ஓட விரட்டிய பொதுமக்கள்!


Karikalan

இடைக்காடு சம்பவத்தில் ஈடுபட்ட அனைவருமே ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவினர்கள். அவர்களில் சாமி என்ற ஈ.பி.ஆர்.எல்.எப் தோழரைப் புலிகள் ஈவிரக்கமின்றி கொலை செய்தனர். இவ்வளவிற்கும் சாமி ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் வெளிப்படையான ஒரு முன்னணி உறுப்பினர் அல்ல. மிகவும் அமைதியாக இருந்துகொண்டு, பின்னணியில் இருந்து கொண்டு விசுவாசமாகச் செயல்பட்ட ஒருவர். அவரது கொலைக்குப் பதிலடியாக, அந்தக் கொலைக்குப் பின்னணியில் இருந்தவர்கள் என சந்தேகிக்கப்பட்ட வேல்முருகன், சுப்பிரமணியம் (சுப்பு - இவர் என்னுடன் ஒன்றாகக் கல்வி கற்றவர்) என்ற இருவரை ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கொலை செய்தார்கள். அந்த இருவரையும் கொலை செய்தவர்கள் என்ற சந்தேகத்திலேயே இருவர் கைதுசெய்யப்பட்டு எம்முடன் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவங்களுக்குப் பின்னணியில் இருந்து செயற்பட்டவர், இன்னொரு உறவினரும் வைத்தியக் கலாநிதியுமான இடைக்காட்டைச் சேர்ந்த ஒரு பெண். இவர் புலிகளின் மட்டக்களப்பு மாவட்டப் பிரதான தளபதிகளில் ஒருவரைத் திருமணம் செய்திருந்தார். அத்துடன் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் பெரும் செல்வாக்கையும் கொண்டிருந்தார். பிரபாகரனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சிகிச்சை அளிப்பவராகவும் இருந்தார். பல முக்கியமான நிகழ்வுகளில் பிரபாகரன் உட்பட புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் பங்கேற்கும் போது, இவரும் புலிகளின் இராணுவச் சீருடையுடன் அவர்களில் ஒருவராக நிற்பதைக் காண முடியும்.

நான் புலிகளினால் கைதுசெய்யப்பட்ட பின்னர், எனது நெருங்கிய உறவினரான இந்தப் பெண் டாக்டரை, இவரது சகோதரர் எமது வேண்டுகோள்கள் எதுவுமின்றியே, எனது விடுதலைக்காக பிரபாகரனிடம் தனது செல்வாக்கைப் பிரயோகிக்கும்படி அணுகியதாக நான் விடுதலையாகி வந்த பின்னர் அறிந்தேன். அவர் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டாரா என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை.

புலிகளின் உறுப்பினர்களைக் கொலை செய்தவர்கள் என்றால் அவர்களுக்குப் புலிகளின் சிறையில் எத்தகைய 'சீர்வரிசைகள்' வழங்கப்படும் என்பதை நான் விவரிக்கத் தேவையில்லை. அத்துடன் அப்படியானவர்களுக்கு என்னவிதமான உச்சபட்ச தண்டனையை அவர்கள் வழங்குவார்கள் என்பதும் எல்லோரும் நன்கறிந்த விடயம். இருப்பினும் அவர்கள் இருவரும் மிகவும் உறுதியாக இருந்ததை அவதானித்தேன். நான் சிறை வைக்கப்பட்டிருந்த பகுதியில் அடைக்கப்பட்டிருந்த அவர்களில் ஒருவர், தற்செயலாக நான் விடுதலையாகி வெளியே போனால், தனது பெயர் – நட்சத்திரம் என்பனவற்றுக்கு நல்லூர் கந்தசாமி கோவிலில் ஒரு அர்ச்சனை செய்யும்படி என்னிடம் வேண்டிக்கொண்டார். அதை நினைக்கும் போதெல்லாம் புலிகளால் வாழ்க்கை மறுக்கப்பட்ட அவரை எண்ணி மனம் வருந்தாமல் இருக்க முடிவதில்லை.


Karikalan`s wife

இந்த இரு 'கொலையாளி'கள் (இந்த வார்த்தையை கிண்டலாகத் தன்னும் பயன்படுத்துவதற்காக அவர்கள் என்னை மன்னிப்பார்களாக. ஏனெனில் புலிகளால் குற்றம்சாட்டப்படுபவர்கள் எத்தகையவர்கள் என்பது, எல்லோரும் நன்கறிந்த விடயம்) குறித்தும் நான் விசேடமாகக் குறிப்பிடுவதற்குக் காரணம், பொதுவாக ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தினர் குறித்து தெரிவித்து வரும் ஒரு விமர்சனத்தை மறு மதிப்பீட்டுக்கு உள்ளாக்குவதற்காகவே. பிரதான தமிழ் ஆயுதப்போராட்ட இயக்கங்களைப் பொறுத்தவரை, புலிகள், புளொட், ரெலோ போன்ற இயக்கங்களிடம் உள்ள 'போராட்டத்' (இராணுவவாதத்) தன்மை ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்திடம் இல்லையென்ற ஒரு கருத்து பொதுவாக இருந்து வந்துள்ளது.

ஆயுதப்போராட்டம் ஆரம்பமான காலத்திலிருந்து அநேகமாக எல்லா இயக்கங்களினதும் முக்கியஸ்தர்கள் என்னுடன் நெருக்கமாகப் பழகி வந்துள்ளனர். அந்த வகையில் ஒவ்வொரு இயக்கமும் மற்றைய இயக்கங்களைப் பற்றி என்ன கருத்துகளைக் கொண்டிருக்கின்றனது என்பதை நான் ஓரளவு அறிவேன். இந்த இயக்கங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட் என்பன தமது கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு பலவிதமான முயற்சிகளை எடுத்து வந்துள்ளனர். அவர்கள் பத்திரிகைகள், வெளியீடுகள் என பலவற்றை அச்சிட்டு மக்கள் மத்தியில் விநியோகித்து வந்துள்ளனர். ஆனால் புலிகளைப் பொறுத்த வரையில், ஆரம்பத்தில் உமா மகேஸ்வரனும் பிரபாகரனும் ஒன்றாக இருந்த நேரத்தில் எமது அச்சகத்தில் அச்சிட்ட 'உணர்வு' பத்திரிகையைத் தவிர, வேறு வெளியீடுகள் எதனையும் வெளியிட்டது கிடையாது. (பிற்காலத்தில் மற்றைய இயக்கங்களைத் தடைசெய்து 'ஏகப்பிரதிநிதிகளாக' மாறிய பின்னர் நிறைய வெளியிட்டார்கள்)

இதுபற்றி ஒருமுறை புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் என்னுடன் உரையாடும் போது, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் போன்ற இயக்கங்கள் காசை கடதாசிகளில் கரியாக்குவதாகவும், தாங்கள் ஒவ்வொரு சதத்தையும் தோட்டாக்களுக்கு மட்டுமே (அதுவும் ஒரு வகையில் கரியாக்குதல் தானே?) செலவழிப்பதாகவும் சொன்னார். இன்னொருமுறை, 1981ம் ஆண்டு என்று நினைக்கிறேன். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உள்ள+ராட்சி சபைத் தேர்தல் ஒன்றின் போது, கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அமைந்திருந்த வாக்குச் சாவடிக்கு காவல் கடமையிலிருந்த பொலிசாரை புலிகள் சுட்டுப்படுகொலை செய்துவிட்டு, நான் திருநெல்வேலியில் தங்கியிருந்த வீட்டு வளவுக்குள்ளால் தப்பியோடினர். (நான் தங்கியிருந்த அந்த வீடு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சிலரால் வாடகைக்கு எடுக்கப்பட்டுப் புலிகளின் மறைவிடமாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததாகப் பின்னர் அறிந்தேன். அவர்களது சங்கேதக் குறியாக அந்த வீடு '13' என அழைக்கப்பட்டதாகவும், திருநெல்வேலி பரமேஸ்;வரா சந்தியிலிருந்த மக்கள் வங்கிக் கொள்ளையின் போது, அதில் நேரடியாகப் பங்குபற்றிய பிரபாகரன் முதல் நாளிரவு அந்த வீட்டில்தான் தங்கியிருந்தார் எனவும் பின்னர் அறிந்து கொண்டேன்)

பொலிசாரைப் புலிகள் சுட்டதைத் தொடர்ந்து. பெருமளவு பொலிசார் அவ்விடத்தில் குவிக்கப்பட்டு, அவர்கள் காணும் பொதுமக்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கியதுடன், கந்தர்மடம் பழம் வீதியிலிருந்த, பெரும்பாலும் ஏழைத் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்து வந்த ஓலைக் குடிசைகளையும் தீயிட்டு சாம்பராக்கிவிட்டனர். பின்னர் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும், ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற இயக்கங்களும் அந்தக் நிதி சேகரித்து, அந்தக் குடிசைகளை மீளமைத்துக் கொடுத்தனர். இதுபற்றி, நான் அடுத்த சில நாட்களில் சந்தித்த ஒரு புலி உறுப்பினரிடம் பிரஸ்தாபித்தேன். அதாவது, 'இவ்வாறு நீங்கள் செய்வதால் பொதுமக்களுக்குத்தானே கஸ்டம்' என விவரித்தேன்.

அதற்கு அந்தப் புலி உறுப்பினர், 'போராட்டம் எண்டால் அப்பிடித்தான் அண்ணை இருக்கும். எங்கடை வேலை எதிரியைச் சுடுகிறதுதான். அதாலை பொதுசனத்துக்கு வாற பாதிப்புக்கு நிவாரணம் செய்ய வேண்டியது ஈ.பி.ஆர்.எல.எப். போன்ற இயக்கங்களின் வேலை. அவைதான் கிடுகுகள் கட்டிக்கொடுக்க வேணும்' எனப் பதிலளித்தார். அதாவது ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற இயக்கங்கள் போராடுவதற்காகத் தோன்றியவை அல்ல என்பதே அவர் சொன்ன பதிலின் சாராம்சம். சரியாகச் சொல்வதானால், போராட்டம் என்ற பெயரில் பொதுமக்களுக்கு இழப்பை ஏற்படுத்தி வந்த தேவையற்ற வன்முறைகளை ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற இயக்கங்கள் தவிர்த்து வந்ததையே, அந்த புலி உறுப்பினர் வேறுவிதமாகக் குறிப்பிட்டார்.

இந்த நிலைமை ஈ.பி.ஆர்.எல்.எப் ஒரு போராட்டத்தன்மை குறைந்த, வீரியமற்ற ஓர் இயக்கம் என்ற பிம்பத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. ஆனால் எல்லாவற்றையும்,தான் எல்லா நேரங்களிலும் சகித்துக்கொண்டிருக்க முடியாது என்பதை ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கம் நிரூபித்த சம்பவமாகவே, இடைக்காட்டில் புலிகளுக்கு அந்த இயக்கம் கொடுத்த 'மறுத்தான்' திகழ்கின்றது என்று நினைக்கின்றேன்.

அதுமட்டுமல்லாது, இன்னொரு சம்பவமும் இதே இடைக்காட்டில் நிகழ்ந்தது. புலிகளால் ஏனைய இயக்கங்கள் தடை செய்யப்பட்ட போது,


Yarl TV
புலிகளின் வதை முகாம்களில் ஒ... ஆண்டுகள் துன்... தோழர் மணிய... அனுபவத்தொட...
சிங்களவர்கள் ... நாங்கள்
யாழ்ப்பாணத்தி... அவலம்!
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட... புலிகளின் உள்ளக... போராட்டம் (பகுதி...
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட... புலிகளின் உள்ளக... போராட்டம் (பகுதி...
ராஜீவ் கொலையாளிக... குற்றப் பின்னன...
தமிழ் மக்கள் இ... வரும் சந்தர்ப்ப...
றொபேட் பிளே... தயவுசெய்து ஸ்ரீ... மக்களுக்குப் ப... சொல்லுங்கள் (...
றொபேட் பிளே... தயவுசெய்து ஸ்ரீ... மக்களுக்குப் ப... சொல்லுங்கள் (...

இடைக்காட்டில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்துடன் இணைந்து செயல்பட்டவர்களை அச்சுவேலியில் உள்ள புலிகளின் காரியாலயத்தில் வந்து சரணடையும்படி, அவர்களின் அச்சுவேலிப் பொறுப்பாளராக அப்போதிருந்த அமுதன் என்பவர் உத்தரவு பிறப்பித்தார். ஆனால் யாருமே அவ்வாறு சரணடைய முன்வரவில்லை. சரணடையாதவர்களைப் பிடிப்பதற்காக அமுதன் தலைமையில் புலிகளின் குழுவொன்று வான் ஒன்றில் இடைக்காடு சென்றது.

அன்று திருவெம்பாவைப் பூசைகள் கோவில்களில் நடைபெற்றுக் கொண்டிருந்தபடியால், மக்கள் அவ்விடங்களில் கூடியிருந்தனர். புலிகள் தமது பிள்ளைகளைப் பலவந்தமாகப் பிடித்துச் செல்வதற்காக வந்திருக்கிறார்கள் என்பதைக் கேள்வியுற்ற பொதுமக்கள், கையில் கிடைத்த உலக்கைகள், தடிகள், அலவாங்குகளுடன் புலிகளின் வாகனத்தைச் சுற்றி வளைத்தனர். பொதுமக்களின் எதிர்ப்புக்கு ஈடுகொடுக்க முடியாத புலிகள், தப்பினோம் பிழைத்தோம் என அங்கிருந்து ஓட வேண்டியதாயிற்று.

பின்னர் புலிகள் விடுத்த மரண அச்சுறுத்தல் காரணமாக, பெற்றோரே தமது பிள்ளைகளை நேரடியாகப் புலிகளின் முகாமுக்கு அழைத்துச் சென்று, விசாரணை முடிவடையும் வரை அந்த இடத்தை விட்டுநகர மறுத்து காவல் இருந்து கையுடன் தமது பிள்ளைகளை மீட்டு வந்தனர்.

இத்தகைய சம்பவங்கள் ஒரு விடயத்தை உணர்த்துகின்றது. அதாவது எதிரி எத்தகைய கொடியவனானாலும், பயங்கர ஆயுதங்களை வைத்திருந்தாலும், மக்கள் ஐக்கியப்பட்டு ஓரணியில் நிற்பார்களானால், அவர்களால் எத்தகைய நெருக்கடிகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும் என்பதே அது. புலிகளின் பாசிசப் போக்கு உருவாகி வந்த நேரத்தில், அதற்கு எதிராக மக்களை ஏனைய இயக்கங்கள் சரியாகவும், திட்டமிட்ட முறையிலும் அணி திரட்டி போராட்டங்களை முன்னெடுத்திருந்தால், ஒரு மகிந்த ராஜபக்சவின் அரசு வந்து புலிகளை ஒழித்துக்கட்டும் வரை காத்திருக்க வேண்டிய தேவையிருந்திருக்காது. பெரும் அழிவுகளும் தவிர்க்கப்பட்டிருக்கும்

தொடரும்.

முன்னைய பதிவுகள்